சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.108/2022**

வாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. K. ரெஜினா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. சரவணன் | த/பெ: வீராச்சாமி |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 03.03.2026 | தாலுக்கா: |

முதல் விசாரணை...

இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி சதானந்தம் என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண் 143/3 ஏ என்றாலும் அதன் விஸ்தீரணம் 17 ஏர்ஸ் என்றால் சரியல்ல. 17 செண்ட் ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ரெங்கசாமி அந்த சொத்து எப்படி தனக்கு கிடைத்தது என்று குறிப்பிட்டு சொல்லாமல் தனக்கு கிடைத்து ஆண்டு அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ரெங்கசாமிக்கு சொத்து பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் அனுபவத்தின் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி வாதிக்கு 255 சதுர மீட்டர் சொத்தும் எனக்கு 445 சதுர மீட்டர் சொத்துக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வாதி அனுபவத்தில் 75 சதுர மீட்டர் மட்டுமே

இருப்பதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நிலத்தை அளவீடு செய்யாமல் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வட்டாட்சியர் அலுவலகத்தில் வைத்தே உட்பிரிவு செய்து உத்தரவு பிறப்பித்துள்ளதால் தான் ஆணையர் அளவீடு செய்யும் போது முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பட்டா யுடிஆர் சர்வே படி வழங்கப்பட்டது என்றால் என் பெயருக்கு வழங்கப்படவில்லை. வாதி பெயருக்குதான் வழங்கப்பட்டுள்ளது. தாவா சொத்து செய்யது சாய்பு மற்றும் 4 நபர்களுக்கு சொந்தமானது என்றாலும் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாததை நான் கிரயம் வாங்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல. யுடிஆர் பட்டா படி தாவா சொத்து வாதிக்கும் எனக்கும் சரிபாதி பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.